Regional Bulletin / Puducherry / Tamil /18.10/ 28.05.2024

வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

நாள் 28.05.2024 செவ்வாய்க்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

ஜுன் 4ஆம் தேதிக்குப் பின்னர், ஊழல்வாதிகள் மீதான நடவடிக்கைகள் மேலும் தீவிரமாக்கப்படும் என்று, பிரதமரும் மூத்த பிஜேபி தலைவருமான திரு.நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, வரும் 30ஆம் தேதி ஒரு நாள் பயணமாக, கன்னியாகுமரி வரவிருக்கிறார்.

மிசோரம் மாநிலத்தில், தலைநகர் ஐஸ்வால் அருகே இன்று, மழையினால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி, குறைந்தது 12 பேர் உயிரிழந்தனர்.

நடப்பு 17ஆவது மக்களவை, மகளிர் இடஒதுக்கீட்டு மசோதா உள்ளிட்ட முக்கிய மசோதாக்களை நிறைவேற்றிய பெருமைக்கு உரியது என்று, மக்களவை தலைவர் திரு.ஓம் பிர்லா கூறியுள்ளார்.

மோடி (15)

ஜுன் 4ஆம் தேதிக்குப் பின்னர், ஊழல்வாதிகள் மீதான நடவடிக்கைகள் மேலும் தீவிரமாக்கப்படும் என்று பிரதமரும் மூத்த பிஜேபி

தலைவருமான திரு.நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று ஜார்கண்ட் மாநிலம், தும்கா பகுதியில் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர் காங்கிரஸ் கட்சியும், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சாவும் ஜார்கண்ட் மக்களைக் கொள்ளையடித்து, சொத்து சேர்த்து இருப்பதாக குற்றம் சாட்டினார். மாநில அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு எதிரான அதிரடி சோதனைகளின் போது பெரும் பணம் சிக்கி இருப்பதாகவும், இத்தகைய சக்திகளிடம் இருந்து நாட்டை விடுவிக்க தாம் உறுதிபூண்டுள்ளதாகவும் அவர் கூறினார். ஜார்கண்ட் மாநிலத்தில ஆளும் ஜே.எம்.எம். கூட்டணி, பழங்குடி மக்களின் நலன்களை புறக்கணித்து, ஊடுருவல்காரர்களுக்கு ஆதரவான விதத்தில் செயல்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார். வரும் ஜூன் 1ஆம் தேதி, 7ஆவது மற்றும் இறுதிக் கட்ட மக்களவை தேர்தலின் ஒரு பகுதியாக, ஜார்கண்ட் மாநிலத்தில் தும்கா உள்ளிட்ட 3 தொகுதிகளில், தேர்தல் நடைபெற உள்ளது. மாநிலத்தில் பிஜேபி தேசியத் தலைவர் திரு. ஜேபி. நட்டா, நாளை, தேவுகர் உட்பட 3 இடங்களில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார். மூத்த காங்கிரஸ் தலைவர் திரு. ராகுல் காந்தி வரும் 30ஆம் தேதி ஜார்கண்ட் மாநிலத்தில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுகிறார்.

மோடி -சேர்க்கை (4)

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று ஜார்கண்ட் மாநிலத்தை தொடர்ந்து, மேற்கு வங்க மாநிலம், பாராசத் மற்றும் ஜாதவ்பூர் மக்களவை

தொகுதிகளிலும் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார். தொடர்ந்து இன்று மாலை கொல்கத்தாவில் அவர் சாலை பவனி நடத்துகிறார்.

**மோடி – குமரி (5)**

பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு. நரேந்திர மோடி வரும் 30ஆம் தேதி ஒரு நாள் பயணமாக, கன்னியாகுமரி வரவிருக்கிறார். குமரி முனையில், விவேகானந்தர் பாறை நினைவகத்தில் உள்ள தியான மண்டபத்தில், திரு. நரேந்திர மோடி தியானத்தில் ஈடுபட இருப்பதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**மோடி சாவர்கர் (5)**

விடுதலைப் போராட்ட வீரர், வீர் சாவர்க்கர், பிறந்த நாளான இன்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி அன்னாருக்கு புகழாரம் சூட்டியுள்ளார். தாய்நாட்டின் சேவைக்கு வாழ்வையே அர்ப்பணித்துக் கொண்டவர் வீர் சாவர்க்கர் என்றும், அவரிடமிருந்து நாட்டு மக்கள் எப்போதும் உணர்வூக்கம் பெறுவார்கள் என்றும், சமூக ஊடகப்பதிவு ஒன்றில் பிரதமர் கூறியுள்ளார்.

மோடி பேட்டி (16)

இட ஒதுக்கீடு என்ற பெயரில் காங்கிரஸ், ஓட்டு வங்கி அரசியலில் ஈடுபடுவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார். இன்று தனியார் செய்தி ஏஜென்சி ஒன்றுக்கு பேட்டியளித்த அவர், அரசியல் சாசனத்தின் அடிப்படை உணர்வுகளை, ஓட்டு வங்கி அரசியலுக்காக, எதிர்க்கட்சிகள் மீறுவதாகவும், இட ஒதுக்கீட்டுப் பிரிவினர் இதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் கூறினார். இட ஒதுக்கீட்டுப் பிரிவினரின் உரிமைகளைப் பாதுகாக்கப் பாடுபடுவேன் என்றும் அவர் குறிப்பிட்டார். அமலாக்கப்பிரிவு உள்ளிட்ட புலனாய்வு அமைப்புகளை எதிர்க்கட்சிகளுக்கு எதிராக அரசு பயன்படுத்துவதாக கூறப்படுவது குறித்து பிரதமர் பதிலளிக்கையில், ஊழலைக் கொஞ்சம் கூட சகித்துக்கொள்ள முடியாது என்பதே அரசின் கொள்கை என்றார். ஜம்மு-காஷ்மீரில் அதிக வாக்குகள் பதிவாகி இருப்பது குறித்து தாம் மிகுந்த மனநிறைவு அடைவதாகவும், இது, சந்தேக நபர்களுக்கு ஜம்மு-காஷ்மீர் மக்கள் அளித்துள்ள செய்தி என்றும் திரு. நரேந்திர மோடி கூறினார். சாதாரண மனிதன் வாக்களிக்கும் போது அரசியல் சாசனத்தையும், இந்தியா என்ற உணர்வையும் ஏற்பதாகவே, பொருளாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நியூ கினியா (13)

பப்புவா நியூகினியாவில் அண்மையில், பெரிய அளவிலான நிலச்சரிவால் ஏற்பட்ட உயிர் மற்றும் உடைமை சேதங்கள் குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி துயரம் வெளியிட்டுள்ளார். பாதிக்கப் பட்டவர்களுக்கு, இயன்ற எல்லா உதவிகளையும் வழங்க இந்தியா தயாராக உள்ளதாக சமூக ஊடகப் பதிவு ஒ்ன்றில் அவர் கூறினார். இதற்கிடையே, பப்புவா நியூகினியா அரசின் நிவாரண மற்றும் மறுவாழ்வு முயற்சிகளுக்கு, இந்தியா, 1 மில்லியன் டாலர் உடனடி உதவி அறிவித்துள்ளது. 2019ஆம் ஆண்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்த, இந்தோ-பசிபிக் பெருங்கடல் முன்முயற்சி திட்டத்தில், பேரிடர் அபாயங்களை குறைக்கும் முயற்சிகள் மற்றும் நிவாரணப் பணிகளுக்கு முக்கிய இடம் இருப்பதாகவும், இயற்கைப் பேரிடர் சம்பவங்களின் போது, மனிதாபிமான உதவிகளை வழங்குவதில் இந்தியாவின் உறுதிப்பாடு தொடரும் என்றும், வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நிலச்சரிவு (6)

மிசோரம் மாநிலத்தில், தலைநகர் ஐஸ்வால் அருகே ஹிலிமென் பகுதியில் இன்று மழையினால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி குறைந்தது 12 பேர் உயிரிழந்தனர். மீட்பு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றனர். ஐஸ்வால் உட்பட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் ரீமல்

புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ மிசோரம் முதலமைச்சர் திரு.லால்துஹோமா, 15 கோடி ரூபாய் நிவாரண நிதி அறிவித்துள்ளார்.

**ஓம் பிர்லா (17)**

பதவிக்காலம் முடிவடையும் நிலையில் உள்ள நடப்பு 17ஆவது மக்களவை, மகளிர் இடஒதுக்கீட்டு மசோதா, முத்தலாக் ஒழிப்பு மசோதா மற்றும் 3 புதிய குற்றவியல் மசோதாக்களை நிறைவேற்றிய முக்கிய அவையாக, எப்போதும் அறியப்படும் என்று, மக்களவை தலைவர் திரு.ஓம் பிர்லா கூறியுள்ளார். இப்புதிய சட்டங்களால், நேர்மறையான மாற்றங்கள் மூலம் நாடு முன்னேறும் என்று, அவர் இன்று புதுடெல்லியில், ஆகாஷ்வாணி செய்தியாளருக்கு அளித்த பிரத்யேக பேட்டியில் கூறினார். 17ஆவது மக்களவையில் இடம் பெற்ற விவாதங்கள், 2047ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய இந்தியாவை உருவாக்குவதற்கான செயல் திட்டமாகப் பயன்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். நாடாளுமன்றத்தில் புதிய எம்பிக்களை வரவேற்க, சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக திரு. ஓம் பிர்லா தெரிவித்தார். புதிய நாடாளுமன்ற கட்டிடம் பயன்பாட்டிற்கு வந்து ஓராண்டு பூர்த்தியாவதை அவர் சுட்டிக்காட்டி, குறைந்த காலத்தில் கட்டி முடிக்கப்பட்ட இக்கட்டிடத்தில், அனைத்து நவீன வசதிகளும் இடம் பெற்றுள்ளதாக கூறினார். நாடாளுமன்ற வளாகம்,

பல்வேறு மாநிலங்களின் தாவர வகைகளுடன், சுற்றுச்சூழலுக்கு உகந்த வளாகமாக மேம்படுத்தப் படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

**உத்தரபிரதேஷ் (12)**

உத்தரபிரதேசத்தில் முதலமைச்சரும், மூத்த பிஜேபி தலைவருமான யோகி ஆதித்யநாத் இன்று கோரக்பூர் தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். மத்தியில் 3ஆவது முறையாக மோடி அரசு அமைந்த பின்னர், 70 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களுக்கு, 5 லட்சம் ரூபாய் வரையிலான இலவச சிகிச்சை வசதியுடன் கூடிய, தனி ஆயுஷ்மான் அட்டை வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார். சமாஜ்வாதி கட்சியின் தலைவர் திரு. அகிலேஷ் யாதவ் இன்று குஷிநகர் மாவட்டத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். நாட்டின் அரசியல் சாசனத்தை மாற்ற பிஜேபி விரும்புவதாக அவர் குற்றம் சாட்டினார். திரு. அகிலேஷ் யாதவ், மூத்த காங்கிரஸ் தலைவர் திரு. ராகுல் காந்தி ஆகியோர் இன்று வாரணாசி, மற்றும் பன்ஸ்காம் தொகுதிகளிலும் கூட்டுப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## பீஹார் (15)

பீஹாரில், மத்திய அமைச்சரும் மூத்த பிஜேபி தலைவருமான திரு.நித்யானந்த ராய், இன்று காராகட் மக்களவை தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். எதிர்க்கட்சிகளின் கூட்டணி, தேர்தலில் பலத்த அடியைச் சந்திக்கும் என்று அவர் கூறினார். உத்தரபிரதேஷ் முதலமைச்சரும், மூத்த பிஜேபி தலைவருமான யோகி ஆதித்யநாத் இன்று பீஹார் மாநிலம், பாடலிபுத்ரா, பாட்னா சாஹிப் உள்ளிட்ட தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். பீஹார் முதலமைச்சரும், ஐக்கிய ஜனதா தள தலைவருமான திரு. நிதீஷ்குமார், நாளந்தா தொகுதியிலும், மூத்த ஆர்ஜேடி தலைவர் திரு. தேஜஸ்வி யாதவ், பக்சார் உள்ளிட்ட தொகுதிகளிலும், பிரச்சாரப் பொதுக்கூட்டங்களில் உரையாற்றினர். ஆர்ஜேடி தலைவர் திரு. லாலு பிரசாத் யாதவ், பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசுகையில், 400க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெறுவதான, பாரதீய ஜனதாவின் கனவு பலிக்காது என்றார். நடப்பு மக்களவை தேர்தல் அரசியல் சாசனத்தையும் இட ஒதுக்கீட்டையும் பாதுகாப்பதற்கான போராட்டம் என்று அவர் குறிப்பிட்டார்.

## ஆயுஷ் (10)

ஆயுஷ் துறையின் வளர்ச்சிக்கு, அதிக ஆராய்ச்சிகள் தேவை என்று, மத்திய ஆயுஷ்துறை செயலர் வைத்யா. ராஜேஷ் கொட்டேச்சா

கூறியுள்ளார். ஆயுர்வேத மருந்துகள் பற்றிய ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப புதுமையாக்கம் குறித்து புதுடெல்லியில் இன்று நடைபெற்ற பிரகதி மாநாட்டை தொடக்கி வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார். மத்திய ஆயுர்வேத அறிவியல் ஆராய்ச்சிக் கழகத்தின் தலைமை இயக்குநர் பேராசிரியர் ரபிநாராயண் ஆச்சார்யா நிகழ்ச்சியில் பேசுகையில், ஆயுர்வேத ஆராய்ச்சிக் கழகத்திற்கும் மருந்து உற்றபத்தியாளர்களுக்கும் இடையிலான ஒத்துழைப்பு வாய்ப்புகளை ஆராய்வதே இம்மாநாட்டின் நோக்கம் என்றார்.

**வானிலை (12)**

தென்மேற்குப் பருவமழை அடுத்த 3-4 நாட்களில் கேரளத்தில் தொடங்கக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்தமிழக பகுதிகளின் மேல், தற்போது வளிமண்டல கீழடுக்கு சுழற்சியும் நிலவுகிறது. இதன் காரணமாக, வரும் ஜூன் 3ஆம் தேதி வரை, தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், வங்கக்கடல் மற்றும் அரபிக்கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளது. இதற்கிடையே தமிழகத்தில் கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக,

குமரி மாவட்டம் பேச்சிப்பாறை உள்ளிட்ட இடங்களில் 5 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

## அசோச்சேம் (16)

மாதவிடாய் கால உடல் நல மேலாண்மை கட்டமைப்பை வலுப்படுத்த விரிவான ஆராய்ச்சிகள் அவசியம் என்று, முன்னாள் புதுச்சேரி துணைநிலை ஆளுநர் டாக்டர் கிரண்பேடி கூறியுள்ளார். இது குறித்து அசோச்சேம் தொழில்-வணிக கூட்டமைப்பு சார்பில், புதுடெல்லியில் இன்று நடைபெற்ற மாநாட்டில் அவர் பேசுகையில், குடிநீர் மற்றும் கேஸ் இணைப்பை போல, சானிட்டரி நாப்கின்களும் பெண்களுக்கு மிக அவசியம் என்றார். சிறையில் உள்ள பெண்களுக்கும், இத்தகைய பொருட்கள் கிடைப்பதை உறுதிப்படுத்துவது அவசியம் என்று அவர் வலியுறுத்தினார். நிதி ஆயோக் துணைத் தலைவர் அலுவலக இயக்குநர் திருமதி ஊர்வசி பிரசாத் இந்நிகழ்ச்சியில் பேசுகையில், மாதவிடாய் கால உடல் நல நிர்வாகத்தில் உள்ள பிரச்சனைகளை, சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்து அணுக வேண்டும் என்றார். மத்திய-மாநில அரசுகள், திறம்பட்ட கொள்கைகள் மூலம் இதில் தலையிட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். உத்தரபிரதேஷ் மாநில அரசின் மின்னணுவியல் துறை சிறப்புச் செயலர் திருமதி மேகா ஜெயின் உள்ளிட்டோர், மாநாட்டில் கலந்து கொண்டனர்.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

ஜூன் 4ஆம் தேதிக்குப் பின்னர், ஊழல்வாதிகள் மீதான நடவடிக்கைகள் மேலும் தீவிரமாக்கப்படும் என்று, பிரதமரும் மூத்த பிஜேபி தலைவருமான திரு.நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, வரும் 30ஆம் தேதி ஒரு நாள் பயணமாக, கன்னியாகுமரி வரவிருக்கிறார்.

மிசோரம் மாநிலத்தில், தலைநகர் ஐஸ்வால் அருகே இன்று, மழையினால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி, குறைந்தது 12 பேர் உயிரிழந்தனர்.

நடப்பு 17ஆவது மக்களவை, மகளிர் இடஒதுக்கீட்டு மசோதா உள்ளிட்ட முக்கிய மசோதாக்களை நிறைவேற்றிய பெருமைக்கு உரியது என்று, மக்களவை தலைவர் திரு.ஓம் பிர்லா கூறியுள்ளார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.**